# மேட்டுப்பாளையம் நகராட்சி

20.12.2021ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

1. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பமின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016(**Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016**)விதி 5, துணை விதி (1) ன் மூலம் திருவண்ணாமலை நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக **(Electronic Service Delivery System)**அமைப்பின் கீழ்**https://tnurbanepay.tn.gov.in/**என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது.

| **வரிசை எண்** | **மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர்** | | | **சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி** |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | |
| | | ii | புதிய குடிநீர்இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கானவிண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர்இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | நகராட்சி ஆணையாளர் |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | |
| | | v | தொழிற்சாலை பயன்பாடுபாதாளசாக்கடைஇ ணைப்புக்கானதடையின்மை சான்று<br>NOC for UGD Connection for Industrial | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | | |
| | | 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | | |
| | | | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | | |
| | | | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | | |
| | | | | iv | மனைப்பிரிவுஅங்கீகாரகட்டணம்<br>Layout Approval Payment | | |
| | | | | v | மனைப்பிரிவுஅங்கீகாரம்கோருதல்<br>Layout Approval Request | | |
| | | | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement<br>Work | | |
| | | | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | | |
| | | | | viii | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br>Planning Permission with Building License Payment | | |
| | | | | ix | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம்<br>(12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 mts) | | |
| | | | | x | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம்<br>(1200 சதுரஅடிக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | |
| | | xii | தொழில் வல்லுநர்/டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/Developers Certificate | |
| | | xiii | கட்டிடவரைபடம்புதுப்பித்தல் கோரிக்கை<br>Renewal Building Plan Request | |
| | | xiv | கட்டிடவரைபடம்புதுப்பித்தல் கட்டணம்<br>Renewal Building Plan Payment | |
| | | xv | தொழில் வல்லுநர்கள் /டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம்பதிவு - தேடல்<br>Trade Registration – Search | |
| | | ii | தொழில் உரிமம்புதுப்பித்தல் - தேடல்<br>Trade Renewal - Search | |
| 6 | சொத்து வரி<br>Property Tax | i | வரிவிதிப்புமுழுவிவரம்<br>View Assessment History | |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | |
| | | ii | தொழில்வரிவிதிப்புக்கான கோரிக்கைமீள சமர்ப்பிப்பு<br>Return Submission | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>8</td><td>பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death</td><td>i</td><td>எனது சான்றிதழ்<br>My Certificate</td><td rowspan="3"></td></tr>
<tr><td>9</td><td>சாலை துண்டிப்பு<br>Road Cutting</td><td>i</td><td>சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission</td></tr>
<tr><td></td><td></td><td>ii</td><td>சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment</td></tr>
</table>
<br>
அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.3666/C1/2021)
</td>
</tr>
<tr>
<td>2.</td>
<td>இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களுக்கு வருடாந்திர பங்கு தொகை<br>
2020 –2021ம் ஆண்டிற்கு ரூ. 90,000/–<br>
2021 – 2022ம் ஆண்டிற்கு <u>ரூ. 1,25,000/–</u><br>
ஆக மொத்தம் <u>ரூ. 2,15,000/–</u><br>
செலுத்துமாறு இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை அவர்களின் கடித ந.க.எண்.276/2020/A2 நாள்.08.12.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மேற்படி தொகை ரூ.2,15,000/– செலுத்துவதற்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<br>
அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.2755/2017/அ3
</td>
</tr>
</table>

3. மேட்டுப்பாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021–22–ன் கீழ் ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.32 வசந்தம் நகர் பகுதியில் புதிதாக பசுமை பூங்கா அமைத்தல் பணிக்கு அரசாணை எண் 90, நாள் 27.10.2021 ன் மூலம் நிர்வாக அனுமதியும், மண்டல செயற்பொறியாளர், திருப்பூர் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண். 3898/2021/பி1, நாள் 19.11.2021 ன் மூலம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது.

மேற்படி பணிக்கு 02.12.2021 ஆம் தேதி இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரிடையாக பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இணையதளம் மூலம் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உறைகளில் தொழில்நுட்பத் தகுதிக்கான உறையினை மட்டும் (Technical Bid) 03.12.2021 அன்று கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களுமே தொழில்நுட்ப தகுதிகள் பெற்றுள்ளனர். எனவே அனைத்து ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறையினை 06.12.2021 அன்று காலை 11.30 மணிக்கு பிரித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.32 வசந்தம் நகர் பகுதியில் புதிதாக பசுமை பூங்கா அமைத்தல் | 50.00 | திருவாளர். சார்ப் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் | 4.83ரூ மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர் செல்வராம் என்டர்பிரைசஸ், திருப்பூர் | 7.10ரூ மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் விலைகுறைப்பு செய்து தர 06.12.2021 –இல் கடிதம் அனுப்பப்பட்டது. 07.12.2021 ஆம் தேதிய கடிதத்தில் ஒப்பந்ததாரர்கள் திருவாளர். சார்ப் சிஸ்டம்ஸ் மற்றும் திருவாளர் செல்வராம் என்டர்பிரைசஸ்ஆகிய இருவரும் தற்பொழுது விலையேற்றம் மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வு ஆகியவை காரணமாக விலைகுறைப்பு செய்து தர இயலாது எனவும் தாங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரியுள்ளனர்.

எனவே மேற்கண்ட திருவாளர். சார்ப் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு 5ரூ மிகாமல் இருப்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம், அதற்குரிய செலவினம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. இவ்வொப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதால் , அதிகப்படியான தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1347/2021/இ1

4. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40 S 4582, TN40 S 9852, TN40 B 1483, TN40 B 1497 தில் டயர் மற்றும் பேட்டரி வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.3054/2021/எச்1

5. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40 3517, த்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3424/2021/எச்1

6. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40 C 0551க்கு தகுதிச் சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.3,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3601/2021/எச்1

7. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 முடிய உள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு ஒமைக்ரான் நோய்கள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான ஸ்டிக்கர்கள் மற்றும் நோட்டிஸ் அச்சிட்டு பெற்றுக்கொள்ள அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

8 மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதி. குடிநீர்நிதி 2021 – 2022ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 07.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | முதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.32 மணிநகர் உயர்நிலைப் பள்ளியில் தெற்கு பார்த்த கட்டிடத்தில் மராமத்து பணிகள் செய்தல் | ரூ.7.00 இலட்சம் | திரு.சி.நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. எம். வேலுசாமி | 3.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.6 மதினா நகர் பகுதியில் ஆழ்துளை கிணற்றிலிருந்துபைப் அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | ரூ.2.00 இலட்சம் | திரு.ஜி.கே.எஸ்.சேதுபதி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.வி.ஆர்.கே.கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 3.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 1346/2021/இ1

| | |
|---|---|
| 9. | மேட்டுப்பாளையம் நகராட்சி பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றம் செய்ய இரண்டு 35Hp நீர்முழ்கி மோட்டார்கள் மாறி மாறி இயங்கி வருகின்றன. சுழல் யூனிட் எண்.II கடந்த 6.12.2021 அன்று இயங்கிக் கொண்டிருந்த போது மின்தடை ஏற்பட்டு நின்றுவிட்டது. மீண்டும் இயக்கும் போது அதிக மின்னோட்டம் காரணமாக (High Voltage) ஸ்டாட்டர் பழுதாகி மோட்டார் காயில் பழுதாகியுள்ளது. மோட்டாரை நிறுத்திப் பிரித்துப் பார்த்த போது பம்பிங் புன்கள், போர்டுகள், சிலிங்கன் மற்றும் கேபிள்கள் பழுதாகியும் காயில் பழுதாகியும் இருந்தது தெரிய வந்தது. இரண்டு மோட்டார்கள் உள்ள இடத்தில் ஒன்று பழுதானதால் மற்றொன்று தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது. அதிலும் எதாலது பழுது ஏற்பட்டால் குடிநீர் விநியோகம் தடைப்படும் ஆதலால் பழுதான 35Hp பம்பிங் பழுதுகள் அகற்றி இயக்க ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் 250mm வால்வின் சட்டர்கள் பழுது அகற்றி ஸ்பான்புகிராடு மாற்றவும் சங்கர் நகர் மேல்நிலைத் தொட்டியின் டெலிவரி வால்வில் விட்டர் பழுது அகற்றி, ஸ்பான்புகிராடு மாற்றவும், தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையாள CID ஜாயிண்டுகள், பேக்கள்ரோப் மற்றும் போர்டுகள் மற்றும் உதிரிச் சாமான்கள், பகிர்மானப் பிரிவில் பழுதான ஸ்பின்புகிராடு மற்றும் செக்கட் மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1345/2021/இ1 |
| 10. | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் சாதனங்களில் ஆய்டு பராமரிப்பு மற்றும் பழுது சரி செய்ய ஆகும் செலவினம் ரூ.61419/–ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள ந.க.எண்.2835/2020/B1, நாள். 22.11.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் தொகையினை ரூ.61419/– நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4047/2020/இ1 |
| 11. | இந்நகராட்சியில் 2018ம் ஆண்டில் தொழில்வரி சீராய்வு செய்ததற்கு Bright advertising நிறுவனம் மூலம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டமைக்கு தொகை ரூ.13,440/–க்கு பட்டியல் வரப்பெற்றது. எனவே, அத்தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1842/2018/அ2 |

**12.** மேட்டுப்பாளையம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2021–22 ன் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் எண் 24886/2021/இ1, நாள் 19.11.2021 ன் மூலம் நிர்வாக அனுமதியும், தலைமைப் பொறியர், சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் எண் 686/2021/DO1, நாள் 22.11.2021 ன் மூலம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது.

| சிப்பம் எண் | பணியி‹ பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்ச◌்தில்) |
|---|---|---|
| 1 | நெல்லித்துறை சாலை இரயில்வே சந்திப்பு முதல் உப்புப்பள்ளம் வரை தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 78.00 |
| 2 | காட்டூர் இரயில்வே சந்திப்பு முதல் நெல்லித்துறை சாலை இரயில்வே சந்திப்பு வரை தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 95.00 |
| 3. | வார்டு எண் 6 மதினா நகர், வார்டு எண் 25 சான் ஜோஸ் பள்ளி சர்ச் சாலை, பெருமாள் லே அவுட் சர்ச் பின்புற சாலை, பெருமாள் லே அவுட் பிரதான சாலை, பெருமாள் லே அவுட் குறு¡ கு வீதி 1, 2, 3,4, ஜெகநாதன் லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 93.50 |
| 4. | வார்டு எண் 17 ராஜபுரம் குறு¡ கு வீதி 1, வார்டு எண் 32 அன்னை நகர் பிரதான சாலை, மணிநகர் பள்ளி சாலை, மணிநகர் வலப்புற குறு¡ கு வீதி ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 78.50 |
| 5. | வார்டு எண் 32 மணிநகர் குறுக்கு வீதி இடப்புறமும், ராமதாஸ் லே அவுட் பின்புறமும் உள்ள சாலை, பாரிகம்பெனி ரோடு சந்திப்பு முதல் நாகலிங்கேஸ்வரர் கோவில் வரை உள்ள சாலை ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 78.50 |
| 6. | வார்டு எண் 32 நாகலிங்கேஸ்வரர் கோவில் சந்திப்பு முதல் நகராட்சி எல்லை வரை (தேக்கம்பட்டி), வசந்தம் நகர் பகுதியில் ( SSS மல்லிகை கடை அருகில்) ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 76.50 |
| | மொத்தம் | 500.00 |

மேற்படி பணிகளுக்கு 07.12.2021 ஆம் தேதி இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரிடையாக சிப்பம் 1க்கு மூன்ற ஒப்பந்தப்புள்ளிகளும், சிப்பம் 2க்கு மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும், சிப்பம் 3க்கு நான்கு ஒப்பந்தப்புள்ளிகளும், சிப்பம் 4க்கு மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும், சிப்பம் 5க்கு மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும், சிப்பம் 6க்கு மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும், இணையதளம் மூலம் சிப்பம் எண் 1, 2, 3, 4, 5, மற்றும் 6 ஆகியவற்றிற்கு பணிக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்பட்டது. இணைதளம் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தொழில்நுட்ப தகுதி இல்லாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டது.

மேற்படி பணிகளுக்கு நேரிடையாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உறைகளில் தொழில்நுட்பத் தகுதிக்கான உறையினை மட்டும் ( Technical Bid) 14.12.2021 அன்று கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற 19 ஒப்பந்ததாரர்களில் திரு. J. செந்தில்குமார், தேனி அவர்களின் சிப்பத்திற்கு ஒன்றாக 6 ஒப்பந்தப்புள்ளி உறைகளும் தொழில்நுட்ப தகுதி பெறப்படவில்லை. எனவே மற்ற அனைத்து ஒப்பந்ததாரர்கள் விலைப்புள்ளி உறையினை 16.12.2021 அன்று காலை 11.30 மணிக்கு பிரித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | நெல்லித்துறை சாலை இரயில்வே சந்திப்பு முதல் உப்புப்பள்ளம் வரை தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 78.00 | திரு. M.K. செல்வா, சிறுமுகை | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. R. பழனிச்சாமி, நீலகிரி | 6.13% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | காட்டூர் இரயில்வே சந்திப்பு முதல் நெல்லித்துறை சாலை இரயில்வே சந்திப்பு வரை தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 95.00 | திருவாளர் வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர் விஷ்ணு இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 7.28% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3. | வார்டு எண் 6 மதினா நகர், வார்டு எண் 25 சான் ஜோஸ் பள்ளி சர்ச் சாலை, பெருமாள் லே அவுட் சர்ச் பின்புற சாலை, பெருமாள் லே அவுட் பிரதான சாலை, பெருமாள் லே அவுட் குறுக்கு வீதி 1, 2, 3,4, ஜெகநாதன் லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 93.50 | திருவாளர் வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர் விஷ்ணு இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 7.51% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. M.K. செல்வா, சிறுமுகை | 9.77% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4. | வார்டு எண் 17 ராஜபுரம் குறுக்கு வீதி 1, வார்டு எண் 32 அன்னை நகர் பிரதான சாலை, மணிநகர் பள்ளி சாலை, மணிநகர் வலப்புற குறுக்கு வீதி ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 78.50 | திருவாளர் V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.66% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. D. ராஜ்குமார் | 7.14% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5. | வார்டு எண் 32 மணிநகர் குறுக்கு வீதி இடப்புறமும், ராமதாஸ் லே அவுட் பின்புறமும் உள்ள சாலை, பாரிகம்பெனி ரோடு சந்திப்பு முதல் நாகலிங்கேஸ்வரர் கோவில் வரை உள்ள சாலை ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 78.50 | திருவாளர் V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.89% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. D. ராஜ்குமார் | 6.69% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 6. | வார்டு எண் 32 நாகலிங்கேஸ்வரர் கோவில் சந்திப்பு முதல் நகராட்சி எல்லை வரை (தேக்கம்பட்டி), வசந்தம் நகர் பகுதியில் ( SSS மல்லிகை கடை அருகில்) ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | 76.50 | திருவாளர் V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.89% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. D. ராஜ்குமார் | 6.69% மதிப்பீட்டிற்கு அதிகம் |

வரப்பெற்ற ஆறு பணிகளுக்கான குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு விலைகுறைப்பு செய்து தர கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி அனைத்து ஒப்பந்ததாரர்களுமே தங்களது கடிதத்தில் தற்பொழுது விலையேற்றம் மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வு ஆகியவை காரணமாக விலைகுறைப்பு செய்து தர இயலாது எனவும் தாங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரியுள்ளனர்.

எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு: | 1. | இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு 5% மிகாமல் இருப்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம், அதற்குரிய செலவினம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். |
| | 2. | இவ்வொப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதால் , அதிகப்படியான தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் |

**13.** மேட்டுப்பாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021–22ன் கீழ் ரூ.145.95 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 ரகுமானியா கார்டன் 3வது மற்றும் 4வது குறுக்கு வீதி, வார்டு எண்.3 ஷெரீப் நகர் 4வது குறுக்கு வீதி, வார்டு எண் தென்றல் நகல் வீதி மற்றும் பிரதான சாலை, சங்கர் (மேட்டுப்பாளையம் கிளப் ரோடு எதிரில்) வார்டு எண்.7 முருகன் கோவில் படித்துறை, வார்டு எண்.17 அன்னூர் ரோடு குறுக்கு தெரு, குமரபுரம் பிரதான சாலை, வார்டு எண்.24 E.B.காலனி பிரதான சாலை வார்டு எண்.30 GMRC பள்ளி குறுக்கு தெரு, வார்டு எண்.32 சாந்தி நகர் வலது 3வது குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்கு அரசாணை எண்.92, நாள்.30.10.2021ன் மூலம் நிர்வாக அனுமதியும், தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.686/2021/டிஓ1, நாள்19.11.2021ன் மூலம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது.

மேற்படி பணிக்கு 02.12.2021 ஆம் தேதி இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரிடையாக பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இணையதளம் மூலம் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உறைகளில் தொழில்நுட்பத் தகுதிக்கான உறையினை மட்டும் (Technical Bid) 03.12.2021 அன்று கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கு தொழில்நுட்ப தகுதிகள் பெற்றுள்ளனர். எனவே, அனைத்து ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறையினை 06.12.2021 அன்று காலை 11.30 மணிக்கு பிரித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 1 ரகுமானியா கார்டன் 3வது மற்றும் 4வது குறுக்கு வீதி, வார்டு எண் 3 ஷெரீப் நகர் 4வது குறுக்கு வீதி, வார்டு எண் தென்றல் நகல் வீதி மற்றும் பிரதான சாலை, சங்கர் நகர் (மேட்டுப்பாளையம் கிளப் ரோடு எதிரில்), வார்டு எண் 7 முருகன் கோவில் படித்துறை, வார்டு எண் 17 அன்னூர் ரோடு குறுக்கு தெரு, குமரபுரம் பிரதான சாலை, வார்டு எண் 24 E.B. காலனி பிரதான சாலை, வார்டு எண் 30 GMRC பள்ளி குறுக்கு தெரு, வார்டு எண் 32 சாந்திநகர் வலது 3வது குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 145.95 | திருவாளர். ஸ்ரீ அசோசியேட்ஸ், கன்னார்பாளையம் | 4.91ரூ மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. டி. ராஜ்குமார், பெரியநாயக்கன் பாளையம் | 15.76ரூ மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | |
|---|---|
| | மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் விலைகுறைப்பு செய்து தர 06.12.2021 –இல் கடிதம் அனுப்பப்பட்டது. 07.12.2021 ஆம் தேதிய கடிதத்தில் ஒப்பந்ததாரர்கள் திருவாளர். ஸ்ரீ அசோசியேட்ஸ் மற்றும் திரு. டி. ராஜ்குமார் ஆகிய இருவரும் தற்பொழுது விலையேற்றம் மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வு ஆகியவை காரணமாக விலைகுறைப்பு செய்து தர இயலாது எனவும் தாங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரியுள்ளனர்.<br>எனவே மேற்கண்ட திருவாளர். ஸ்ரீ அசோசியேட்ஸ், கன்னார்பாளையம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: 1. இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு 5ரூ மிகாமல் இருப்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம், அதற்குரிய செலவினம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>2. இவ்வொப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதால் , அதிகப்படியான தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் |
| 14. | இந்நகராட்சி பொதுப்பிரிவில் பணியமைப்பு சம்பந்தமான வழக்குகளுக்கான 2021 – 22ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவினமே ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண்.2794/2021/சி1 |

15. மேட்டுப்பாளையம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020–2021 (Tied Grant) கீழ் 100.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வால்வு பிட் கட்டுதல் | 10.00 |
| 2. | தலைமை நீரேற்று நிலையத்தில் Clarification மராமத்து பணிகள் செய்தல் | 10.00 |
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட ஆழ்துளை கிணற்றுடன் பொருத்தப்பட்டுள்ள பழுதான Sintex tank மாற்றுதல் | 10.00 |
| 4. | பங்களாமேடு நீருந்து நிலையத்தில் உள்ள combined scheme மோட்டார் அறைக்கு வர்ணம் பூசுதல் | 4.00 |
| 5. | புதிய நகராட்சி அலுவலக முதல் தளத்தில் பொது சுகாதார பிரிவிற்கு Store room கட்டுதல் | 10.00 |
| 6. | மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்கள் நிறுத்துவதற்கு பொது சுகாதார வார்டு அலுவலகத்தன் அருகில் (நான்கு இடங்களில்) Shed அமைத்தல் | 10.00 |
| 7. | வார்டு எண் 27 பேருந்து நிலையம், பங்களாமேடு ஆகிய பகுதிகளில் உள்ள வார்டு அலுவலகத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |
| 8. | வார்டு எண் 4 சிறுமுகை ரோடு, வார்டு எண் 8 முனிசிபல் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள வார்டு அலுவலகத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |
| 9. | நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை இயந்திரங்கள் மூலம் அகற்றுதல் | 5.00 |
| 10. | நகராட்சி உரக்கிடங்கில் பசுமை வளையம் அமைத்தல் | 10.00 |
| 11. | நகராட்சி உரக்கிடங்கில் உள்ள அலுவலக அறை மற்றும் பாதுகாப்பு அறையில் மராமத்து பணிகள் செய்தல் | 6.00 |
| 12. | நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் சுற்றுச்சுவர் கட்டுதல் | 5.00 |
| 13. | நகராட்சி உரக்கிடங்கில் மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் | 10.00 |
| | **மொத்தம்** | **100.00** |

<u>அலுவலகக் குறிப்பு</u> ‘ மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 3389 / 2020/ இ1)

| | |
|---|---|
| 16. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பராவாமல் இருக்கவும், கொரோனா நோய் ஏற்பட்ட பகுதிகளில் சுகாதார பணிகள் மேற்கொள்வதற்கான பாதுகாப்பு உபகரணங்கள் பெற்றிட அதற்கான தோராய செலவினம் ரூ.11.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020–2021 (Untied Grant) கீழ் 102.50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி பேருந்து நிலையத்தில் time switch வாங்கி பொருத்துதல் மற்றும் High Mast Light மராமத்து செய்தல் | 5.00 |
| 2. | வார்டு எண் 17 ராஜபுரம், வார்டு எண் ஏ.டி. காலனி, வார்டு எண் 4 சிறுமுகை ரோடு பகுதிகளில் சிறுபாலம் கட்டுதல் | 10.00 |
| 3. | மகாதேவபுரம் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 4.00 |
| 4. | வார்டு எண் 9 ராமசாமி பிள்ளை வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 6.00 |
| 5. | வார்டு எண் 13 அக்ரஹாரம் தெரு (டாம் டாம் இட்லி கடை அருகில்) சிறுபாலம் கட்டுதல் | 4.00 |
| 6. | வார்டு எண் 14 தந்தை பெரியார் வீதியில் சிறுபாலம் கட்டுதல் மற்றும் தொண்டுபட்டி சாலையில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிறுபாலம் கட்டுதல் | 8.00 |
| 7. | வார்டு எண் 20 எக்ஸ்டென்சன் வீதியில் சிறுபாலம் கட்டுதல் | 5.00 |
| 8. | வார்டு எண் 20 மினி மருத்துவமனை சாலையில் சிறுபாலம் கட்டுதல் | 5.00 |
| 9. | வார்டு எண் 12 விளையாட்டு மாரியம்மன் கோவில், வார்டு எண் 24 சக்தி மருத்துவமனை (NCMS Colony) , வார்டு எண் 25 சுப்பம்மாள் லே அவுட் ஆகிய பகுதிகளில் சிறுபாலம் கட்டுதல் | 10.00 |
| 10. | வார்டு எண் 4 கே.சி.ஆர் பகுதி பூங்காவில் சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் மழைநீர் வாடிகாலுடன் சிறுபாலம் கட்டுதல் | 5.00 |
| 11. | வார்டு எண் 3 வெள்ளிபாளையம் சாலையில் மழைநீர் வாடிகாலுடன் சிறுபாலம் கட்டுதல் | 5.00 |
| 12. | வார்டு எண் 32 மணிநகர் குறுக்கு வீதி இடப்புறமும், ராமதாஸ் லே அவுட் பின்புறமும் உள்ள சாலை, பாரிகம்பெனி ரோடு சந்திப்பு முதல் நாகலிங்கேஸ்வரர் கோவில் வரை உள்ள சாலை ஆகிய பகுதிகளில் WMM Patches அமைத்தல் | 10.00 |
| 13. | காட்டூர் இரயில்வே சந்திப்பு முதல் நெல்லித்துறை சாலை இரயில்வே சந்திப்பு வரை WMM Patches அமைத்தல் | 10.00 |
| 14. | நெல்லித்துறை சாலை இரயில்வே சந்திப்பு முதல் உப்புப்பள்ளம் வரை WMM Patches அமைத்தல் | 5.00 |
| 15. | வார்டு எண் 33 பாரதிநகர் பகுதியில் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் கட்டுதல் | 5.00 |
| 16. | வார்டு எண் 4 திப்புசுல்தான் வீதியில் உள்ள நகராட்சி பகுதியில் கம்பிவேலி அமைத்தல் | 5.50 |
| | **மொத்தம்** | **102.50** |

<u>அலுவலகக் குறிப்பு</u> ' மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 3389 / 2020/ இ1)

| | |
|---|---|
| 18 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021–2022 (Tied Grant) கீழ் 54.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய குடிநீர்த் திட்டத்தில் 60HP மற்றும் 70HP Vertical turbine Pump புதியதாக மாற்றுதல் | 30.00 |
| 2. | தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய குடிநீர்த் திட்டத்தில் 125HP HSC Motor Pumpset with Starter புதியதாக மாற்றுதல் | 24.00 |
| | **மொத்தம்** | **54.00** |

<u>அலுவலகக் குறிப்பு</u> ‘ மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 3389 / 2020/ இ1)

| | |
|---|---|
| 19 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.16 எம்.எஸ்.ஆர் புரம் பகுதியில் புதியதாக நகர்நல ஆரோக்கிய மையம் (Wellness Center) கட்டுதல் பணி மேற்கொள்ள 15வது நிதிக்குழு மானியம் 2021–2022ன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித எண்.32454/2021/AMRUT–2, நாள்.17.12.2021 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்படுவதை மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. இப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை எடுத்தற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2557/2021/இ1 |
| 20 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண்.58 உரிமையாளர் திரு.ஒய்.அமானுல்லா த/பெ.யஹயா என்பவர் நீண்ட காலம் கடை வாடகை செலுத்தப்படாமல் ரூ.60,46,567/– நிலுவையாக உள்ளது. நீதிமன்ற மூலம் பெற்று வழங்க அதற்கான கட்டணம் ரூ.1,81,397/– மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.5,000/– மொத்தம் ரூ.1,86,397/– வழங்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மேற்கண்ட தொகையினை வழங்க மன்றம் முன் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். |

21 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் பணிகளை பள்ளிக்குழந்தைகள் மற்றும் பொது மக்கள் நலன் பருதி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **பொது நிதி** | |
| 1 | புதியதாக அமைக்கப்பட்ட சாலைகளில் Manhole raising செய்தல் | 5.00 |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 18 பொதுக்கழிப்பிடங்களில் Napkin எரியூட்டும் இயந்திரம் பொருத்துதல் | 7.40 |
| | **குடிநீர் நிதி** | |
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் குழாய் திருப்புநர் பணி மற்றும் அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் காவலர் பணி மேற்கொள்ளுதல் | 9.90 |
| 4. | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பம்பிங் மெயின், பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்தல் | 5.00 |
| | **கல்வி நிதி** | |
| 5. | நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் stage முன்புறம் மேற்கூரை அமைத்தல் | 9.90 |
| 6. | நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் மணிநகர் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் Napkin எரியூட்டும் இயந்திரம் பொருத்துதல் | 0.85 |

மேற்காணும் பணிகளை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக¡ குறிப்பு : அனுமதி அளி¡கலாம்.